JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.659/2024
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மும்தாஜ் | தாலுகா | தென்காசி |
| கணவர் பெயர் | மகபுஜான் | தொழில் | குளத்து வேலை |
| கிராமம் | பொட்டல் புதூர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday 29.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் பொறுப்பில் இருப்பதால் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பதால் இங்கு ஆஜராகவில்லை. )

<u>**முதல் விசாரணை:-**</u>

நான் தற்போது பொட்டல்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் குளத்து வேலைக்கு போவேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உறவினர். அசா.1 நபிஷா என் உடன் பிறந்த சகோதரி. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.659/2024
PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நபிஷா | தாலுகா | தென்காசி |
| கணவர் பெயர் | ஜலாலுதின் | தொழில் | பீடிசுற்றும் வேலை |
| கிராமம் | பொட்டல் புதூர் | வயது | 49 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Friday 29.05.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் பொறுப்பில் இருப்பதால் வேறு நீதிமன்றத்தில் ஆஜராகி இருப்பதால் இங்கு ஆஜராகவில்லை. )

முதல் விசாரணை:–

நான் தற்போது பொட்டல்புதூரில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுற்றும் தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். என் உறவினர். நான் எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டேன். கடந்த 7 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிக்கும் எனக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டது. எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினையை ஊர் பெரியவர்கள் முன்பு பேசி தீர்த்து கொண்டோம். நான் தடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்வாக்குமூலத்தில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை அசிங்கமாக பேசவில்லை, அடித்து காயப்படுத்தவில்லை, கொலைமிரட்டல் விடுக்கவில்லை. தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் வழக்கை மேல் நடத்த விரும்பவில்லை. புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi